

ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். மேலும் அமைச்சர் சு.முத்துசாமி மாற்றுத்திறனாளிகளிடம் கழக அரசின் திராவிட மாடல் ஆட்சியில் சாதனைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கியுள்ள நலத்திட்டங்கள் பற்றி விளக்கி கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், கழக விவசாய அணி இணை செயலாளர் குறிஞ்சி என்.சிவக்குமார், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மேயர் நாகரத்தினம், தலைமை கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், ஈரோடு இளைய கோபால், மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ரமேஷ்குமார், இமயம் சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

### விழுப்புரம் வருகை: பாதை எல்லாம் பாசக் குரல்கள்! வீதிஎல்லாம் நேச அழைப்புகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், பிப்.5 -

விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பொறுப்பிற்கு புதியவன் இந்த எளியவனை "உங்களில் ஒருவன்" நான் என தாயுள்ளத்தோடு வாழ்த்திய கழக குடும்பத்தின் தலைவரே தமிழகத்தின் முதல்வரே

என்றென்றும் நன்றியுடன் நான் இருப்பேன் உங்கள் கட்டளைக்கு செயலாற்ற காத்திருப்பேன் இந்திய நாட்டையே திரும்பி பார்க்க வைக்கும் வியப்புமிகு வியர்வைத் துளிகளுக்கும் தமிழ் நாட்டை முன்னேறிய நாடுகளுக்கு இணையாக



உயர்த்துகின்ற தன்னேரில்லா விடாமுயற்சிக்கும் ஒளிரும் சான்றான உங்களிடம் யான் பெற்ற பாராட்டு கிடைத்தற்கரிய நற்பேறு ஆகும்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் திரண்ட வாக்குகளும் விழுப்புரத்தின் மணிமண்டப திறப்பு விழாக்களில் சாலையின் இருபுறமும் சமுத்திரமே வந்ததைப் போன்ற கூட்டமும் தங்களின் தன்னிகரற்ற ஆட்சிக்கு கிடைத்த அத்தாட்சிகள்.

எழுப்பிய வாழ்த்தொலிகள் துணை முதல்வரின் துடிப்புமிகு தொண்டுக்கு கிடைத்த எதிரொலிகள் வாய்ப்பு அளித்தமைக்கு வாழ்நாள் முழுவதும் உழைத்தே தேய்வேன் நீங்கள் இடும் ஆணையினை இமைக்கொட்டும் நேரத்தில் செய்துக்காட்ட கலைஞரின் மொழியாக பாய்வேன் இந்திய அரசியலில் தீராத பெருமை MKS. உங்களின் வற்றாத புகழுக்கு காரணம் MKS (Militancy , Kindness , Sacrifice )

எங்கள் தலைவரே !! விழுப்புரத்துக்கு நீங்கள் வந்தபொழுது பாதை எல்லாம் பாசக் குரல்கள் வீதி எல்லாம் நேச அழைப்புகள் உங்களுக்கு எழுப்பிய வாழ்த்தொலிகள் வான் வெளியிலேயே எதிரொலிக்கும் முரசொலிகள் உங்கள் பாராட்டு ஆயிரம் குளுகோஸ் பாட்டில்கள் லட்சம் வைட்டமின் மாத்திரைகள் எங்களுக்கு நாள்கள் இருப்பதே உங்கள் சுட்டுவிரல் திசையில் மக்களுக்கு உழைப்பதற்கே எங்களுக்கு தோள்கள் இருப்பதே... முதல்வரே !!

உங்களையும் இயக்கத்தையும் சுமப்பதற்கே நீங்கள் அகமகிழ்ந்து பொழிந்திட்ட அத்துனை வாழ்த்துகளையும் என்னோடு உழைத்திட்ட முத்தமிழ் அறிஞர் நம் கலைஞர் அவர்களின் உணர்வோடு கலந்திட்ட விழுப்புரம் மாவட்டத்து உடன்பிறப்புகள் அனைவருக்கும் அப்படியே சமர்பித்து நெஞ்சார மகிழ்கின்றேன் கொடையாக பெரும்பொறுப்பை அளித்தவரே படையாக என்றும் இருப்போம் நாளெல்லாம் பொழுதெல்லாம் நன்றியோடு எப்பொழுதும் தங்கள் கட்டளைக்கு காத்திருப்பேன்!

இவ்வாறு டாக்டர் பொன்.கௌதம சிகாமணி கூறியுள்ளார்.



திருவெறும்பூர் அருகே காட்டூர் ஆதிதிராவிடர் நல்ல பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழக முதல்வரின் நமக்கு நாமே திட்டம் கும்பகோணம் பரஸ்பர ஸகயா நிதி லிமிடெட் மூலமாக மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூபாய் 10 லட்சத்து 66 ஆயிரம் மதிப்பில் 200 இருக்கை மற்றும் மேசைகள் வழங்கும் விழா நடைபெற்றது இந்நிகழ்வில் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தனது சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளி அம்பிகாபுரம் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, செந்தனீர்புரம் அரசு ஆதி திராவிடர் நலப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்டூர், அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, காட்டூர் ,ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பகவதிபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காமராஜர் நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி மலை கோவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு 32 லட்சம் மதிப்பீட்டில் சுமார் 200 எண்ணிக்கையிலான 6 அடி நீளமுள்ள இருக்கை மற்றும் மேசைகளை பள்ளிக் குழந்தைகளின் பயன்பாட்டிற்காக வழங்கினார் மேலும் பள்ளி குழந்தைகளுடன் அந்த மேசைகளில் புகைப்படம் எடுத்துக் கொண்டார். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணபிரியா , மாநகராட்சி உதவி ஆணையர் சரவணன், உதவி செயற்பொறியாளர் ஜெகஜீவன் ராமன், இளநிலை பொறியாளர் நரசிங்கமூர்த்தி , மாமன்ற உறுப்பினர் தாஜுதீன் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் , செஞ்சியில் மறைந்த முன்னாள் செஞ்சி ஒன்றியச் செயலாளர் ரங்கநாதனின் 16 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டுஅவரது திருவுருவப்படத்திற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மயிலம் ஒன்றியப் பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், துணை சேர்மன் ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வராஜ், மணிவண்ணன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன் ஆகியோர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டத்தின் 3 வது புத்தக திருவிழாவினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழகச்செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் இறையன்பு, மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஆர்.ராஜா, மங்கை எம்.சங்கர், ப.முருகமணி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு.குமார், நகர கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன் மற்றும் பலர் உள்ளனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., முன்னிலை!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் 3 ஆவது புத்தகத் திருவிழா!

## அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தொடங்கி வைத்தார்!

மயிலாடுதுறை பிப்.5 -

மயிலாடுதுறை மாவட்டத்தில் 3 வது புத்தகத் திருவிழாவினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்.

மயிலாடுதுறை மாவட்டம், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியில் மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகம், பள்ளி கல்வித்துறை மற்றும் பொது நூலக இயக்ககம் இணைந்து நடத்தும் புத்தகத் திருவிழா நடைபெற்றது. புத்தக திருவிழா தொடக்க நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் உமா மகேஸ்வரி வரவேற்றார்.

புத்தகத் திருவிழாவை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் திறந்து வைத்து. அரங்குகளை பார்வையிட்டு தொடக்க விழாவில் பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2006 இல் துணை முதலமைச்சராக இருந்த போது தமிழ்நாட்டிலுள்ள 12524 ஊராட்சிகளிலும் நூலகங்களை உருவாக்கியவர் ஆவார். 2010 இல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆசியாவிலேயே 2 வது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தினை சுமார் 647,000; புத்தகங்களுடன்; சென்னையில் நிறுவினார். இந்நூலகத்திற்கு 2023-2024 ஆண்டில் மட்டும் சுமார் 4 லட்சம் வாசகர்கள் வந்து சென்றுள்ளனர்.

அதனடிப்படையில், இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மதுரையில் ரூ.250 கோடி மதிப் பீட்டில் மிகப் பெரிய நூலகத்தினை அமைத்துள்ளார்கள். இந்த நூலகத்தில் இதுவரை சுமார் 9 லட்சம் வாச கர்கள் வந்து சென்றுள்ளனர்.

சென்னை மாநகரில் மட்டுமே புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வந்த நிலையில், நமது முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்களும், பொதுமக்களும் பயன்பெற்று, அறிவார்ந்த சமுதாயம் உருவாக வேண்டுமென்ற நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும், ஆண்டு தோறும் புத்தகக் கண்காட்சியினை நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் பிறந்த எஸ்.அரங்கநாதன் "நூலகவியலின் தந்தை" எனப் போற்றப்படுகிறார். நல்ல புத்தகங்கள், நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகளை நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும் என்றார் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்கள்.

அதேபோன்று, ஒரு மனிதனை நல்லவனாக நெறிப்படுத்துவது புத்தகங்கள் மட்டுமே ஆகும். ஒரு புத்தகத்தைப் படிப்பது என்பது ஒரு புதிய நண்பனைப் பெறுவது போன்றதாகும். அப்படியான நூல்களை நாம் நிறைய வாங்கி படிக்க வேண்டும். அலைபேசியில் மூழ்கிக் கிடக்கும் நம் வாழ்வினை புத்தகங்களே நெறிப்படுத்தும். எப்போதெல்லாம் முடிகிறதோ அப்போதெல்லாம் படிக்க முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, மாணவச் செல்வங்களும் பொதுமக்களும் இந்த புத்தகத் திருவிழாவினைப் நன்கு பயன்படுத்திக் கொண்டு, நிறைய புத்தங்கள் வாங்கிட வேண்டும். "கல்வியில் சிறந்த தமிழ்நாடு: புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு'' என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப, கல்வியால் மட்டுமே நாம் சாதிக்க முடியும் இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் இறையன்பு, நாகப்பட்டினம் மாவட்ட முன்னாள் ஆட்சித் தலைவர் முனுசாமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி. என்.ரவி, மாவட்ட துணை செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ்.செல்வமணி,மயிலாடுதுறை நகரக் கழக செயலாளரும், மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவர் என். செல்வராஜ், சீர்காழி நகரக் கழக செயலா ளரும், சீர்காழி நகர மன்ற துணைத் தலைவர் ம.சுப்பராயன், ஒன்றிய கழக செயலாளர்கள் ப.முருகமணி, மங்கை எம். சங்கர், ஏ.ஜி.ஜே.பிரபாகர், பஞ்சு. குமார், ஏ. ஆர். ராஜா, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், அரசு வழக்கறிஞர் இராம.சேயோன்,மாவட்ட அறங்காவல் குழு தலைவர் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், பொதுக் குழு உறுப்பினர் பி.சிவதாஸ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெடி பாலமுருகன், மாவட்ட ஊராட்சிக்குழு முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரி

தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுண சங்கரி குமரவேல், மணல்மேடு பேரூராட்சித் தலைவர் கண்மணிஅறிவழகன், குத்தாலம் பேரூராட்சித் தலைவர் சங்கீதாமாரியப்பன், கழக வழக்கறிஞர்கள் தணிகைபழனி, அருள்தாஸ், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் க.சுரேஷ், நகர் மன்ற உறுப்பினர் ரஜினி, மாவட்ட நூலகர் அ.சுமதி, தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள்; சங்கத் தலைவர் சேது.சொக்கலிங்கம், தென்னிந்திய புத்தக விற்பனை யாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கச் செயலர் எஸ்.கே.முருகன், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் செல்வி. விஷ்ணு பிரியா, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் சுரேஷ், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம் எல் ஏ., தலைமையில் ஓசூரில் ராம் நகரில் இருந்து தாலுகா அலுவலகம் செல்லும் சாலை அண்ணா சிலை வரை அமைதி பேரணியாக சென்று அங்குள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாநகர செயலாளரும் மேயருமான சத்யா, துணை செயலாளர் சின்னசாமி, பொருளாளர் சுகுமாரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீராரெட்டி கிரீஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் தனலட்சுமி, முனிராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றியம், பகுதி, பேரூர் மற்றும் கிளை கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், மற்றும் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்கள், மாமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், கிளை செயலாளர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை ஒட்டி சென்னை முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் வழங்கினார். உடன் கோவில் செயல் அலுவலர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.